**Dw1:Thammeem Ansari** **<u>OS. NO:10751/2010</u>** **<u>DATE:31.03.2022</u>**

குறுக்கு விசாரணை தொடர்சி

பி.சா.ஆ1 சம்மந்தப்பட்ட அடமானத்தை நான் மீட்கவில்லை. அதன் பேரில் நான் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது அதன் பேரில் நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. பி.சா.ஆ2 வாதியால் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கு உண்டான ஆவணம் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ4 வாதியிடம் யிருந்து வரப்பட்டது என்பதற்கு உண்டான ஆவணம் நீதிமன்றதில் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ6 என்னால் பெறப்பட்டது என்பதற்கு உண்டான ஆதாரம் நீதிமன்றத்தில் இல்லை. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது தரைதளத்தில் இருந்த 2கடைகளுக்கு யார் வாடகை வாங்கினார் என்றால் நாரயணன் வாங்கியதாக சாட்சி கூறுகிறார். வாதியை வாடகையை வாங்க சொல்ல ஒப்பந்தத்தை தவிர வேறு ஆவணங்கள் இல்லை. வா.சா.ஆ1 தயார் செய்யப்பட்டது என்று சொல்வதற்க்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. வா.சா.ஆ2 பொது அதிகார பத்திரம் அதில் தாவா சொத்து பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ3ல் உறுதி மொழி ஆவணத்தில் வா.சா.ஆ1 சம்மந்தப்பட்ட தொகை சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ4 என்னுடைய கடையை வாதி வாடகைக்கு விட்டள்ளார் அதற்க்கு உண்டான ஒப்பந்தம் தான் இது. இதற்க்கு முன்பு நான் இந்த வாதிக்கு தான் வாடகைக்கு விட்டேன் என்று சொல்வதற்க்கு உண்டான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படுவது 05/07ல் கொடுக்கப்பட்ட

மெயில் தான். அதற்க்கு வாதியால் கொடுக்கப்பட்ட பதில் வா.சா.ஆ6 தான். வா.சா.ஆ8 என்பது சொத்து சம்மந்தப்பட்ட கடைக்கு உண்டான மின்சார கட்டண அட்டை. வா.சா.ஆ9 என்னிடம் கொடுத்த பவரை ரத்து செய்தது தான். இது ஆங்கிலத்தில் உள்ளது. வாதி எனக்கு வாதி வழக்கு தாக்கல் செய்வதற்க்கு முன்பு ஒரு அறிவிப்பு எனக்கு கொடுத்தார் என்றால் அது எனக்கு ஞாபகம்இல்லை. அகமது என்பவர் என் தகப்பனார். வா.சா.ஆ11 ல் உள்ள கையெழுத்து என் தகப்பானருடையது இல்லை. வா.சா.ஆ1ல் அகமது என்ற கையெழுத்து உள்ளது அது என் தகப்பனார் தான். வா.சா.ஆ12 என்பது R.C.O.P No 706/2012 க்கு உண்டான தீர்புரை மற்றும் தீர்பணை அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அதே போல வா.சா.ஆ 14 மற்றும் 15 என்பது R.C.O.P No 707/2012 ஆகும் இந்த வழக்கும் தள்ளுபடி ஆகிவிட்டது. வா.சா.ஆ16 பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ16 மற்றும் 17 என்பது அ.வ.எண்6383/2008 ன் வழக்கினுடைய தீர்ப்பு மற்றும் தீர்பாணை. அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. அ.வ.எண்6383/2008 ன் வழக்குரை நகல் .வா.சா.ஆ18. இந்த வழக்கில் பிரதிவாதி எதிர்வழக்குரைய தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்கிணங்க குறுக்கு விசாரணை நிறுத்தி ஒத்திவைக்கப்படுகிறது)